பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 04 செவ்வாய்கிழமை (17-03-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 111

# மும்முனைத் தாக்குதல்களினால் வடமராட்சி நேற்று அதிர்ந்தது

## முற்பகல் முழுவதும் அனர்த்தம்

வடமராட்சி, மார்ச் 17

**பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு பகுதிகளில் ஸ்ரீலங்காப் படையினர் நேற்று முற்பகல் முழுவதும் மேற்கொண்ட மும்முனைத் தாக்குதல்களினால் வடமராட்சிப் பகுதி அதிர்ந்தது.**

**இத்தாக்குதல்களினால் ஐந்து பேர் படுகாயமடைந்தனர்; வீடுகள் மற்றும் உடைமைகள் பெரும் நாசத்திற்கு உள்ளாகின.**

நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை இப்பகுதிகளில் பொம்மர்கள், அவ்ரோ ஆகியவற்றிலிருந்து வானக் குண்டு வீச்சும்—

கடற்படைப் படகுகளில் இருந்து பீரங்கித் தாக்குதல்களும்—

இராணுவ முகாம்களிலிருந்து ஷெல் தாக்குதல்களும் — நடத்தப்பட்டன.

[6 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்தி முரளி



சோதனைக்கு......
'சோதனை மேல் சோதனை போதுமடா சாமி' ......!

### ஜி.சீ.ஈ. (உ.த) விசேட பரீட்சை:

## பரீட்சை ஏற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன!

யாழ்ப்பாணம், மார்ச் 17

ஜி. சீ. ஈ. [உயர்தர] விசேட பரீட்சையை நடத்துவது தொடர்பான முன்னேற்பாடுகளை மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு யாழ். கல்வித் திணைக்களத்துக்கு பரீட்சை ஆணையாளர் அவசரச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலம் அனுப்பப்பட்ட இந்தச் செய்தி தொடர்பாக மேல் விவரங்களை அறிந்துகொள்ள முடியவில்லை.

கடந்த செவ்வாயன்று கொழும்பில் நடந்த கூட்டத்தில் மேற்படி பரீட்சையை முன்னர் அறிவித்தபடி ஏப்ரல் முதல் வாரத்தில் நடத்த கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

[உ–5]

## மணலாறு காவலரண் மீது புலிகள் அதிரடித் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச். 17

மணலாறு மாவட்டத்தில் சிலோன் தியேட்டர் இராணுவ முகாமிலிருந்து 600 யார் தூரத்தில் அமைந்துள்ள காவலரண் மீது நேற்று முன்தினம் காலை விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் ஒன்றை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும் — எஞ்சிய படையினர் மயிரிழையில் தப்பி ஓடினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலின் போது ரி 56 ரக துப்பாக்கிக்குரிய ரவைக் கூடுகள் - 12, நடுத்தர ரவைகள் - 1,460, தொடர் ரவைகள் - 300 ஆகியவற்றையும் இராணுவ தளபாடங்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர்.

[உ–3]

## மலையகத் தோட்டங்களுக்கு அடிக்கடி தீவைப்பு!

கொழும்பு, மார்ச். 17

மலைநாட்டில் உள்ள தேயிலை மற்றும் ரப்பர் தோட்டங்களில் அங்கும் இங்குமாக விஷமிகள் தீவைத்து சேதமேற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில வாரங்களாக ஆங்காங்கே தோட்டங்களில் பரவிய தீயை தொழிலாளர்கள் அணைத்தனர் என்றும் கூறப்படுகின்றது.

தீவைக்கும் சம்பவங்களில் ஈடுபடும் விஷமிகளைக் கைது செய்து, அவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி பொலீஸ் நிலையங்கள் பணிக்கப்பட்டுள்ளன.

[உ–எ]

## யாழ். ஆஸ்பத்திரிக்கு விமானம் மூலம் மருந்து!

கொழும்பு, மார்ச். 17

யாழ். ஆஸ்பத்திரிக்குத் தேவையான அத்தியவாசிய மருந்து வகைகளை விமானம் மூலம் - பலாலி வழியாக - அனுப்பி வைக்க பாதுகாப்பு அமைச்சு இணக்கம் தெரிவித்திருக்கிறது. கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் இத்தகவலைத் தெரிவித்தன.

யாழ். ஆஸ்பத்திரிப்பணிப்பாளர் தலைமையில் கொழும்பு சென்ற குழு, ஆஸ்பத்திரித் தேவைகள் குறித்து சுகாதார மற்றும் பாது

[6 ஆம் பக்கம் பார்க்க]

## காயமுற்றோர்

வடமராட்சி, மார்ச். 17

நேற்று வடமராட்சிப் பகுதி மீது நடத்தப்பட்ட மும்முனைத் தாக்குதல்களில் ஆறு பேர் காயமுற்றனர்.

முத்துலிங்கம் அமிர்தலிங்கம் [வயது 33] — ஆலடி, ஆறுமுகசாமி சிறீதரன் [வயது 18] — வேம்படி, சபாரத்தினம் சந்திரமோகன் [வயது 21] — ரேவடி, முருகன் இரத்தினசிங்கம் [வயது 30] — கெருடாவில், குமாரசாமி இராசரத்தினம் [வயது 49] — நவிண்டில், ச. அருணாசலம் [வயது 65] ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்கள் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

[உ–15-165]

## அகதிகளை பார்வையிட ஐ. நா. குழு

கொழும்பு, மார்ச் 17

தமிழ் நாட்டில் இருந்து இலங்கை திரும்பும் தமிழ் அகதிகளின் நிலைகுறித்து ஆராய மூன்று அதிகாரிகள் அடங்கிய ஐ. நா. அகதிகள் தூதரக குழு ஒன்று கொழும்பு வந்துள்ளது

இந்தக் குழு கடந்த சனிக்கிழமை தலைமன்னாருக்கு சென்று அகதிகளை பார்வையிட்டது. பின்னர் இக்குழு திருமலைக்கு செல்லவும் ஏற்பாடாகியிருந்தது.

[த–3]

## மக்கள் இடம்பெயர்வு

வடமராட்சிப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற அகோரத் தாக்குதல்களை அடுத்து அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது. மக்கள் இடம்பெயர்ந்தனர். வழமையான வாழ்க்கைநிலை பாதிப்புற்றது.

தொண்டமனாறு முதல் வல்வெட்டித்துறை வரையான பகுதியில் தங்கிருயிருந்த மக்களே பெரும்பாலும் இடம்பெயர்ந்தனர்.

இவர்கள் நெல்லியடி, கரணவாய், உடுப்பிட்டி, நவிண்டில் மற்றும் அயல் பகுதிகளுக்கே இடம்பெயர்ந்தனர்.

[உ–15-165]

## பாத யாத்திரை ஆரம்பம்

கொழும்பு, மார்ச். 17

எட்டு எதிர்க்கட்சிகள் ஒழுங்கு செய்துள்ள பதினெட்டு நாள் பாதயாத்திரை நேற்றுக்காலை கொழும்பில் இருந்து கதிர்காமம் நோக்கி ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

[உ-எ]

## பிரபாகரனை எப்படியும் கைது செய்ய வேண்டுமாம்!

### அமைச்சர் சவான் கூறுகிறார்

புதுடில்லி, மார்ச் 17

"முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாக விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனையும் அவரது உளவுப்பிரிவுத் தலைவர் பொட்டு அம்மானையும் கைது செய்தே ஆகவேண்டும்."

மத்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் நேற்று ராஜ்யசபையில் இவ்வாறு தெரிவித்தார்.

ராஜீவ் காந்தி கொலை பற்றிய விசாரணை மெத்தனமாகப் போவதாக ஆளும்கட்சி உறுப்பினர்களும், எதிர்க்கட்சி உறுப்பினர்களும்

[6ஆம் பக்கம் பார்க்க]

## ஐரோப்பிய தூதர்கள் அரசியல்தீர்வுக்கு வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 17

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்பதில் பல ஐரோப்பிய நாடுகள் அக்கறையாக உள்ளன.

அதனைத் தொடர்ந்து இனப்பிரச்சினையைத் தீர்க்க ஒரு சுமுகமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதில் ஐந்து ஐரோப்பிய நாடுகளின் கொழும்புத் தூதுவர்கள் இப்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

ஆஸ்திரேலியா, அமெரிக்கா, பிரிட்டன், மற்றும் சுவீடன்,

[6ஆம் பக்கம் பார்க்க]

# 'டாங்கிகள்' கொள்வனவில் 10 கோடி ரூபா 'கமிஷன்'

### இராணுவ வட்டாரத்தில் அதிருப்தி

கொழும்பு, மார்ச் 17

ஸ்ரீலங்கா இராணுவத்துக்கென அண்மையில் செக்கோஸ்லேவாக்கியாவிலிருந்து 28 டாங்கிகள் [கவச வாகனங்கள்] கொள்வனவு செய்யப்பட்ட விவகாரத்தில் சுமார் 10 கோடி ரூபா 'கமிஷன்' வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விடயம் இராணுவ வட்டாரத்தில் அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறதாம்.

இந்தக் கவசவாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஸ்ரீலங்கா அரசு 30 கோடி ரூபாவைச் செலவிட்டது. அதில் மூன்றில் ஒரு பகுதி — சுமார் 10 கோடி ரூபா—இடைத்தரகர்களின் "பைகளுக்கு" போனதாக சிங்கள வாரஇதழ் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

கவச வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக ஸ்ரீலங்கா இராணுவத்தின் உயர் இராணுவக் குழு ஒன்று கடந்த ஆகஸ்டில் ஆறு ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம் செய்தது. அதன் பின்னர் செக்கோஸ்லேவாக்கியாவிடமிருந்து இந்த கவசவாகனங்

[6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் சில மாதங்களில் திடீர் ஜனாதிபதித் தேர்தல்

## சிங்கள வார இதழ் ஹேஸ்யம்

கொழும்பு, மார்ச் 17

★ அடுத்த சில மாதங்களில் திடீர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடைபெறும்.

★ இவ்வாண்டு டிசம்பரில் நடைபெற வேண்டிய மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் இன்னும் ஒரு வருடத்துக்குத் தள்ளிப் போடப்படும்.

அரசுடன் தொடர்புடைய — நம்பத்தகுந்த — வட்டாரங்களை மேற்கோள் காட்டி ''ராவய'' சிங்கள வார இதழ் தகவல் வெளியிட்டிருக்கிறது.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு எதிரான கட்சிகள் தனித்தனியாக வளர்ந்து வரும் அதேவேளை, அக்கட்சிகளிடையே ஒற்றுமையான சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை. அக்கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்பட்டு, ஜனாதிபதித் தேர்தலுக்கு அக்கட்சிகள் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தக்கூடிய இணக்கமான நிலை உருவாவதற்கு முன்னர் — அதற்கான கால அவகாசத்தை வழங்காது — அதிரடி நடவடிக்கையாக திடீர் ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்த அரசு உயர்பீடம் திட்டமிட்டிருக்கிறதாம்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் சுதந்திரமாகவும், சாதாரண நிலையிலும் நடைபெறவில்லை என்று உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் கண்டனம் தெரிவிக்கப்பட்டு வருவதும் அரச வட்டாரங்களை விசனத்துக்கு உள்ளாக்கியிருக்கிறது.

இதே சமயம் 1988 ஜனாதிபதித் தேர்தலில் திரு. பிரேமதாஸா வெற்றியீட்டியதை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்டிருந்த ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேபனை வழக்கும் ஓரளவு முடிவுறும் கட்டத்தை அடைந்துள்ளது. இன்னும் சில மாதங்களுக்குள் தீர்ப்பு வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

வழக்குத் தீர்ப்பு, ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு வெற்றியை உறுதிப்படுத்துவதாக அமையுமா என்பதும் கேள்விக்குறியே.

இத்தகைய சிக்கல்களினால் எழக்கூடிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வழியாகவே புதிய தேர்தலை பிரேமதாஸா நாடுவார் என்று கருத்துத் தெரிவிக்கப்பட்டது. [உ-10]

# சிறிமா அரசியலிலிருந்து ஒய்வு பெறமாட்டார்

''நான் அரசியலில் இருந்து விலகப் போவதில்லை, இந்தியாவில் இருந்து திரும்பியதும் மீண்டும் அரசியல் நடவடிக்கைகளில் கட்சித்தலைவர் என்ற முறையில் ஈடுபடுவேன்.''

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கடந்த புதன்கிழமை இந்தியாவுக்கு புறப்படுவதற்கு முன்னர் தனது ஆதரவாளர்கள் மத்தியில் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

தாம் கொழும்பு திரும்பும் வரை அத்தனகல தொகுதி தொடர்பான சுதந்திரக்கட்சியின் அரசியல் நடவடிக்கைகளில் திருமதி சந்திரிக்கா குமாரணதுங்க கலந்து கொள்வார் என்றும் அவர் தெரிவித்தார். (இ-எ)

# பிரேமா - ஜா சந்திப்பு

கொழும்பு, மார்ச் 17

இலங்கை திரும்பிய 7,500 தமிழ் அகதிகள் மற்றும் வேறு விவகாரங்கள் குறித்தும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் என். என். ஜா ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் பேச்சுக்கள் நடத்தியதாக ''சண்டே ரைம்ஸ்'' செய்தி வெளியிட்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் பற்றி மேலதிக விவரங்கள் கோரும் கடிதம் ஒன்றை வெளியுறவு அமைச்சர் ஹரோல்ட் ஹேரத்திடம் இந்தியத் தூதர் என். என். ஜா கையளித்தார் என்றும் அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [த-எ]

# விடுதலைப் போராட்டத்தின் அங்கமே மறுமலர்ச்சி கழகம்

## நிறைவு விழாவையொட்டி அறிக்கை

தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஓர் அங்கமே யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகம். இது விடுதலைப் போராட்டத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் குழந்தை.

நேற்று தனது 12ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடியதை ஒட்டி, மறுமலர்ச்சிக்கழகம் விடுத்த அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நீண்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

மறுமலர்ச்சிக் கழகம் காலகட்டத் தேவையின் வெளிப்பாடு. இது தேசிய நிர்மாணிப்பின் பொருட்டும் அதற்கான அறிவியல் தேவையின் பொருட்டும் தோன்றிய ஒரு கழகம்.

இதன் வாழ்வு ஒரு சுகப் பிரசவம் அல்ல. ஸ்ரீலங்காப் பொலீஸார் உலாவித் திரிந்து போராளிகளை கைது செய்ய முற்பட்ட காலத்தில் கழகம் தோன்றியது. இத்தகைய சூழலிலும் அது தன் கருத்துக்களை முன்வைத்தது. மக்களை அரசியல் மயப்படுத்த முற்பட்டது.

இதனால் இராணுவத்தால் இக்கழகத் தலைவர்கள் விசாரணைக்குட்படுத்தப்பட்டும் தேடப்பட்டும் வந்தனர். ஆயினும் அது முதுகெலும்புடன் நிமிரலாயிற்று — என்று உள்ளது. [ஔ-3]

# பிரேமதாஸா என்னுடன் போட்டியிட முன் வருவாரா?

## லலித் சவால் விடுகிறார்

கொழும்பு, மார்ச் 17

ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு மக்கள் ஆதரவு இல்லை. இதை அறிந்து கொள்ள திரு. பிரேமதாஸா கொழும்பு மாவட்டத்தில் என்னுடன் போட்டியிட முன்வருமாறு சவால் விடுக்கின்றேன்.

முன்னாள் அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி நுகேகொடையில் நடந்த ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக் கூட்டத்தில் பேசுகையில் முன்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் சொன்னதாவது;

தமாஷா பைத்தியத்தினால் நாடு துன்பப்படுகின்றது. நாணய நோட்டுக்களை அரசு அதிகமாக அச்சிட்டதனால் தான் நாட்டில் பண வீக்கமும் விலை உயர்வும் ஏற்பட்டுள்ளன.

நாட்டின் தேசிய வருமானத்தில் பத்துச் சத வீதம் மட்டுமே யுத்தத்திற்காகச் செலவிடப்படுகின்றது.

இப்படி திரு. அத்துலத் முதலி சொன்னார். [இ-எ]

# விவசாய உபகரணங்களை கொண்டுவர நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு தேவையான விவசாய உபகரணங்கள், நீரிறைக்கும் இயந்திரம் போன்றவற்றை கப்பல் மூலம் எடுத்துவர ப. நோ. கூ. சங்கங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

இப் பொருள்களை கொள்வனவு செய்து கப்பலில் எடுத்துவர ப. நோ. கூ. சங்க கொள்வனவு முகாமையாளர்கள் கொழும்பு சென்றுள்ளதாக தெரியவருகிறது.

சைக்கிள் ரயர், அல்கத்தின் குழாய்கள் போன்றவையும் கொண்டு வரப்படும் பொருள்களுள் அடங்கும். [த-3]

# இன்று

கொழும்புத்துறை, மார்ச் 17

யாழ் கொழும்புத்துறை சென். ஜோசப்ஸ் வித்தியாலய மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

★ ★ ★

உதயன் சுற்றுக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் பொது அறிவுப் போட்டியின் இறுதிச் சுற்றுப் போட்டி இன்று பிற்பகல் 2-30 மணிக்கு யாழ். இந்து குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி லியோ கழகமும் சுன்னாகம் லயன்ஸ் கழகமும் இணைந்து இப்போட்டிகளை நடத்துகின்றன. [உ]

# விளையாட்டு போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் இல்லங்களுக்கு இடையிலான வருடாந்த விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை காலை 8-30 மணிக்கு ஆயர். தியோகுப்பிள்ளை விளையாட்டரங்கில் நடைபெறும்.

## வானுயர்ந்த கட்டடம் நிறுவும்

# மத்திய வங்கியின் திட்டம் ஜனாதிபதியால் நிராகரிப்பு

கொழும்பு, மார்ச் 17

வானுயர்ந்த கட்டடங்களைக் கட்ட மத்திய வங்கியும் அரச அடமான மற்றும் முதலீட்டு வங்கிகள் வகுத்திருந்த திட்டங்களை ஜனாதிபதி பிரேமதாஸா நிராகரித்து விட்டார்.

மத்திய வங்கி இருநூறு கோடி ரூபா செலவில் பல மாடிக் கட்டடம் ஒன்றை நிர்

[5 ஆம் பக்கம் பார்க்க]


நவீன மருத்துவமனை
Modern Hospital

திறப்பு விழா அழைப்பு

காலம்; 18 - 03 - 1992 புதன் காலை 8.30 மணி

இடம்: இல. 767, மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம் அருகில், யாழ்ப்பாணம்.

தலைமை: திரு. பு. சுப்ரமணியம் அவர்கள் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர், கிராமாதிகாரி - வேலணை.

மங்கள விளக்கேற்றல்:
1. திரு. எஸ். இராஜலிங்கம் (இலங்கை வங்கி முகாமையாளர் - நாரந்தனை)
2. திரு. சீ. பொன்னையா (S.P.N.Co.

பிரதம விருந்தினர்: டாக்டர் ந. சிவராஜா அவர்கள் (மருத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்)

திறந்து வைப்பவர்: டாக்டர் R. தெய்வேந்திரன் சுகாதார வைத்திய அதிபர், யாழ். மாநகரம்.

ஆசியுரை:

நன்றியுரை: திரு. க. சிவராமலிங்கம் M. A.

அன்பிற்கினிய தீவக மக்களுக்கும், மற்றையோருக்கும், காலத்தின் தேவை கருதி, சேவை நோக்குடன் நாம் இம் மருத்துவமனையினை நவீன வசதிகளுடன் ஆரம்பிக்கிறோம். தங்கள் ஆதரவை நாடிநிற்பதுடன், விழாவில் கலந்து சிறப்பிக்க வெண்டுகிறோம்.

நன்றி!

டாக்டர் ஆ. பேரின்பநாதன்,
நிர்வாக இயக்குனர்,
[அமிர்தம்ஸ் - புங்குடுதீவு]

டாக்டர் சதா. கிருஷ்ணதாஸ்
M. B. B. S. [Cey]
பணிப்பாளர் - Director.

[20108]



7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மாணிக்கம் துரைராசா (S.M.T.)
(பிரபல வர்த்தகர் கிளிநொச்சி-வவுனியா)

அன்னை மடியில்: 21 - 10 - 1964
அர்க்கர் அழிப்பில்: 25 - 03 - 1986
திதி: 17 - 03 - 1992

தொட்டதெல்லாம் துலங்கும் தொழிலதிபர் நீயையா!
எஸ். எம். ரீ என்ற பெயர் எங்கும் ஒலிக்குதய்யா!
தற்புகழ் விரும்புவோர் தரணியில் பலரையா!
எப்புகழும் விரும்பாத நீயோ இமயமய்யா!
சுட்டுதீர்த்தாரே சுடுகாட்டு பேய்கள் எட்டுதிக்கினிலும்
இதயங்கள் ஏங்குதய்யா! கோடியில் ஒருவராய்
வாழ்ந்திட்ட குலவிளக்கு கொட்டிய
உன்குருதி கொடியவரை கொல்லுமய்யா!
7 ஆண்டுகள் சென்றாலும் உன் பாசச்சிரிப்பை என்றும்
மறவோமய்யா!

வல்லை றோட்,
அச்சுவேலி.

இங்ஙனம்
மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்

[20113]



பெண்கள் துவிச்சக்கர வண்டி விற்பனைக்கு

★ லுமாலா (Lumala), ★ ஏசியா (Asia) பெண்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் (Ladies Bicycles) விற்பனைக்குண்டு.

★ விமாகி ★

[1667] 27/3, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை [illegible]
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# காவலிலிருந்த மூன்று தமிழர் அப்பீல் நீதிமன்றில் விடுதலை

கொழும்பு, மார்ச் 17

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ்க் கிராமவாசிகள் கடந்த வியாழக்கிழமை அப்பீல் நீதிமன்றம் முன்னிலையில் இராணுவத்தினால் விடுவிக்கப்பட்டனர்.

கொஹோம்பவேவா கிராமத்தைச் சேர்ந்த சற்குணபால (வயது 12), கந்தையா சிவதாஸன் (வயது 22), ஆதிர்கம சுப்பிரமணியம் (வயது 48) ஆகியோரே விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

மேல் நீதிமன்றத்தில் இவர்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனுவைத் தொடர்ந்து, இவர்களை விடுவிக்கும்படி சட்டமா அதிபர் இராணுவத்திற்கு ஆலோசனை கூறியிருந்தார்.

கடத்திச் செல்லப்பட்டவர்களின் குடும்பம் ஒன்று விடுவிக்கப்பட்டால் ஒழிய, உங்களை விடுவிக்கப் போவதில்லை என்று கூறி கொஹோம்பவேவா இராணுவ அதிகாரி இம் மூவரைக் கைது செய்தார் என்று ஆட்கொணர்வு மனுவில் கூறப்பட்டிருந்தது.

மனுவில் பிரதிவாதிகளாக கொஹோம்பவேவா இராணுவ முகாம் தளபதி, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோர் காட்டப்பட்டிருந்தனர்.

[இ-எ]

# இரத்மலானை இந்துக் கல்லூரி இயங்கும்

கொழும்பு, மார்ச் 17

இரத்மலானை இந்துக் கல்லூரி வளாகத்துக்கு ஞாயிறு விஜயம் செய்த ஜனாதிபதி பிரேமதாசா, கல்லூரியை மீண்டும் இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் போது சேதமாக்கப்பட்ட கட்டடங்களையும் ஜனாதிபதி பார்வையிட்டார்.

தற்போது இக்கல்லூரி கட்டடங்களில் இராணுவ அதிகாரிகள் சிலர் தங்கி இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

# அடையாளம் காணவில்லை

கிளிநொச்சி, மார்ச் 17

கிளிநொச்சி, இரணைமடுக் குளத்தில் இருந்து வட்டக்கச்சி செல்லும் பிரதான வாய்க்காலுக்கு அருகில் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்ட ஆண் ஒருவரின் சடலம் உருக்குலைந்த நிலையில் விடுதலைப் புலிகளினால் மீட்கப்பட்டுள்ளது.

சுமார் 35 வயது மதிக்கத்தக்க ஒருவரின் சடலமே மீட்கப்பட்டது. சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. [ஒ-76]

# சடலம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

மானிப்பாய், கட்டுடையில் வயல் கிணறு ஒன்றில் காணப்பட்டதாக கூறப்படும் இளம் குடும்பப் பெண்ணின் சடலம் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அதே பகுதியைச் சேர்ந்த வசந்தகுமார் மகாதேவி [வயது 35] என்பவரே இறந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது. [ஓ 15]

# பேசாலையில் தேடுதல்

மன்னார், மார்ச் 17

பேசாலை பட்டினப் பகுதியை கடந்த வாரம் இராணுவத்தினர் முற்றுகையிட்டு தேடுதல் நடத்தினர். இதனால் அப்பகுதியில் சில மணி நேரம் பதற்றம் நிலவியது.

தேடுதலின்போது சின்னத்தம்பி டேவிட் என்பவர் இறந்ததாகவும் கூறப்பட்டது. [ஓ]

# வடமராட்சியில் ஹெலி சூடு

வடமராட்சி, மார்ச் 17

வடமராட்சிப் பகுதியை ஞாயிறு இரு ஹெலிகள் வட்டமிட்டு நோட்டமிட்டன. ஒரு ஹெலி முள்ளிப் பகுதியில் வேட்டுகளையும் தீர்த்தது.

இதேசமயம், கடந்த இரு தினங்களாக குண்டு வீச்சு விமானங்கள், சீ-பிளேன் மற்றும் ஹெலிகள் வடமராட்சிப் பகுதியை நோட்டமிட்டு வருவதாக எமது செய்தியாளர் அறிவிக்கிறார். [ஒ-165]

# சாட்சியங்கள் முடிவுற்றன

சென்னை, மார்ச் 17

ராஜீவ் கொலை தொடர்பாக — அவருக்கு வழங்கப்பட்ட பாதுகாப்புக் குறித்து விசாரிப்பதற்கு — நியமிக்கப்பட்ட வர்மா ஆணைக்குழு சாட்சியங்களைப் பதிவு செய்வதை நேற்று முன்தினம் முடித்துக் கொண்டது. [உ-த]

## நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின்

# நேர்முக விசாரணைகள் 23 ஆம் திகதியுடன் பூர்த்தி

கொழும்பு, மார்ச் 17

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழு தனது நேர்முக விசாரணைகளை இம் மாதம் 23 ஆம் திகதி முடித்துக் கொள்ளவிருக்கின்றது.

இக் குழுவின் முன் சாட்சியம் அளிக்கும் கடைசி பிரமுகராக தென் மாகாண சபையின் முதலமைச்சர் எம். எஸ். அமரசிறி இருப்பார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வாரம் மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்த்தனா தலைமையிலான குழு, தெரிவுக் குழு முன் சாட்சியமளித்தது. சுதந்திரக் கட்சி எம். பி. ஆனந்த தஸநாயக்காவும் கடந்த வாரம் சாட்சியமளித்தார். [இ-எ]

# சர்வோதயத்தை கண்காணிக்க அதிகாரி நியமனம்

கொழும்பு, மார்ச் 17

நாட்டில் சர்வோதய இயக்கம் மேற்கொண்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களைக் கண்காணிக்கும் அதிகாரியாக இலங்கைக் கடற்படையின் முன்னாள் தளபதி அட்மிரல் ஏ. டபிள்யு. பெரேரா பணியாற்றி வருகின்றார்.

கடந்த வாரம் இவர், சர்வோதய இயக்கத் தலைவர் டாக்டர் ஆரியரத்னாவுடன் பதவியா, கந்தளாய், சேருவில, திருமலை ஆகிய இடங்களுக்கு விஜயம் செய்தார்.

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் வல்லிபுரம் தியாகராஜா

எங்கள் கல்லூரி மருத்துவப் பேராசிரியர் Dr. தி. பரமசிவம் அவர்களின் தந்தையாரின் ஆத்ம சாந்திக்காக நாமும் பிரார்த்தனை செய்கிறோம்.

சாயி மருத்துவக் கல்லூரி-
அதிபர், மருத்துவபீட மாணவ,
மாணவியர்கள்,
தாதிப்பயிற்சி மாணவியர்கள்,
கல்லூரி உத்தியோகத்தர்கள்.

[சி/1655]

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 04 | 17 |
| 05 | 02 |
| 1907 | 1992 |



அமரர்

## வல்லிபுரம் தியாகராஜா

செந்தமிழ்க் கடவுளாம் செவ்வேட் கடவுனாய்
சிந்தை யெல்லாம் அவனே யாகிட
செல்வச் சந்நிதி சென்றவன் திருமுன்
உள்ளம் உருகி உவப்பில் ஆழ்ந்து
வாரந் தோறும் வள்ளி மணாளனை
நேரில் கண்டு நெஞ்சம் களித்து
அன்பும் பண்பும் அறிவும் போற்றி
என்றும் எங்கள் ஏற்றம் கருதி
நல்லுரை பலவும் நயமாய்ப் பகர்ந்து
கல்வியில் சிறந்து நாமெலாம் விளங்கி
வல்லவராகி வளமுடன் வாழ
எல்லா வகையிலும் எம்மை ஊக்கி
இல்லறக் கடன்மை இனிதே ஆற்றி
நல்லறம் பலவும் நனிமிகச் செய்து
குலத்தின் கொடியாய் குடும்ப விளக்காய்
இலதொளி காட்டி எமக்கொளி ஊட்டி
இறையடி நீழல் தழுவிய தென்னே
இதுவே நியதி யென்றாறுதல் கொள்வோம்.

இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், 18-03-92 புதன்கிழமை இல்லத்தில் நிகழவிருக்கும் அன்னாரது ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தி. சாம்பசிவம், தி. சதாசிவம்,
தி. பரமசிவம், தி. ஞானசிவம்,
தி. செல்வச்சிவம், திருமதி குருசிவம்,
தி. அருட்சிவம், பிஹேமலதா சிவமயம்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

'லதா வாசம்',
உதயசூரியன் வீதி,
வல்வெட்டித்துறை.

(4513)

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் மு. சி. கனகரத்தினம்

(ஆசிரியர்)

மறைவு: 25 — 03 — 1986

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நினைவு கூரும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

13/3, நாயன்மார் வீதி,
நல்லூர்.

[20106]

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 30-09-1917

அமரத்துவம்: 17-03-1988



## அமரர் சின்னத்தம்பி தருமலிங்கம்

(Retired, Police Sergeant)

பண்பின் பிறப்பிடமான அன்புத் தெய்வமே! காலத்தின் கோலத்தால் காலன் உமை அழைத்து ஆண்டு நான்கு போனாலும், உங்கள் பொன்னான நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலா.

''அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர்
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு''

உங்கள் ஆத்மா சாந்தி பெற என்றென்றும் பிரார்த்திக்கும்:

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

வர்த்தலை விளான்,
தெல்லிப்பழை.

(20105)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கில (Stencils) ரைப்பிங் வேலைகள் செய்து கொடுக்கப்படும். பியூடோ, 39/17, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 3 ஆம் ஒழுங்கை, கிளை பிரதான வீதி, சங்கானை.

[சி-1629]

## இலவச திருமண சேவை

றோமன் கத்தோலிக்க, 33 வயது, அரச தொழில் புரியும் பெண்ணுக்கு தகுந்த மணமகனைப் பெற்றோர் தேடுகின்றனர். 'நாடுங்கள் சேவையை ஞாயிறு காலையில், து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

[4534]

30 வயது, B.Sc Diploma in Education ஆசிரியருக்கும், 25 வயது A/L பெண்ணுக்கும் தகுந்த மணமக்கள் தேவை. சகல தரத்திலும் மணமக்கள் உண்டு. தொடர்பு ஞாயிறு காலையில் து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

[4537]

## பரீட்சை வழிகாட்டி O/L

சமூகக்கல்வி, வரலாறு O/L பரீட்சை வழிகாட்டி விற்பனையாகிறது. பகுதி I பல் தேர்வு வினாக்கள், பகுதி II அமைப்பு வினாக்கள், வெற்றிடங்கள் நிரப்புதல் அடங்கியது. பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்களுக்கு ஏற்றது. விலை ரூபா 21/-. ஆக்கம்: நா. மயில்வாகனம்.

[20091]

## வரலாறு ஆண்டு 9

வினா - விடைகள், பாட நூல் பயிற்சி விடைகள் தவணைப் பரீட்சைப் பயிற்சிகள் யாவும் அடங்கிய வரலாறு ஆண்டு-9 குறிப்புகள் வெளிவந்துள்ளன. ஆக்கம்; நா. மயில்வாகனம், சென் ஜோன்ஸ் கல்லூரி. யாழ்ப்பாணம் புத்தகசாலைகளில் பெறலாம்.

[20090]

## ரயில் சேவை நேரம் மாற்றம்

கொழும்பு, மார்ச் 17

கொழும்பு- வவுனியா இரவு ரயில் நேற்று முதல் இரவு 9-45 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

[த]

## பஞ்சாப்பில் 18 பேர் பலி!

சண்டிகார், மார்ச் 17

பஞ்சாப் மாநிலம் லூதியானா நகரில் ஞாயிறு சீக்கியத் தீவிரவாதிகள் கண்மூடித்தனமாக நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 18 பேர் கொல்லப்பட்டனர்.

ஸ்கூட்டர் ஒன்றில் சென்ற தீவிரவாதிகள் செய்த துப்பாக்கிப் பிரயோகத்தில் விஸ்வகர்ம கொலனியில் மட்டும் பத்துப்பேர் உயிரிழந்தனர்; இன்னொரு இடத்தில் 8 பேர் உயிரிழந்தனர்.

பஞ்சாப் மாநில சட்டசபையின் முதலாவது கூட்டம் நேற்று நடைபெற்றது இன்று செவ்வாய்க்கிழமை சபாநாயகர் தெரிவு இடம் பெற உள்ளது. நாளை புதன் கிழமை புதிய சட்ட சபையை மாநில ஆளுநர் அங்குரார்ப்பணஞ்செய்து வைக்க இருக்கிறார்.

இந்த நிகழ்ச்சிகளுக்குச் சவால் விடும் விதத்திலேயே தாக்குதல் நடவடிக்கைகளை சீக்கியத் தீவிரவாதிகள் தீவிரப்படுத்தியுள்ளனர். என்று தெரிவிக்கப்படுகிறது.

[உ-எ]

---


# A/L 91 (Special 92)
# PAPER CLASS

இன்று (17 - 03 - 1992)

பிற்பகல் 1-30 மணிக்கு தாவரவியல் பரீட்சை ஆரம்பமாகும்.

**NEW MASTER INSTITUTE**

B. M. C. Lane, JAFFNA.

[சி-1665]


---


கிரிக்கெட் ரசிகர்களே! அபிமானிகளே!!

நீண்ட இடை வெளியின் பின்

## யாழ்ப்பாணத்தில் "பெரும் போட்டி"

(Big Match) நடக்கப் போகிறது.

ஆம்! அடுத்த வாரத்தில்
யாழ். மத்திய கல்லூரியும்,
சென். ஜோன்ஸ் கல்லூரியும்
மோதுகின்றன.

அதனையொட்டி உங்களுக்கு ஒரு போட்டி
அது தான் ..

## ★ கிரிக்கெட் வினா - விடைப் போட்டி ★

நீங்களும் எவ்வித தடையுமின்றி இப்போட்டியில் கலந்து கொள்ளலாம்.

படிவங்களை இன்றே நிரப்பி ஒப்படையுங்கள்.

★ மத்திய கல்லூரியிலும், பூபாலசிங்கம் புத்தக சாலையிலும் ரூ. 3/- அன்பளிப்பாகக் கொடுத்துப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

முடிவு திகதி: **19 — 03 — 1992**

யாழ். மத்திய கல்லூரி இன்ரறக்ட் கழகம்


---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தூல முகிழ்வு: 23 — 03 — 1919

தூல அவிழ்ப்பு: 16 — 02 — 1992

## வயிரவபிள்ளை சபாபதி

(Retired, Textile Inspector)

அருமை அப்பாவாய் நிழல் கொடுத்து
அன்னையாக அரவணைத்து மகிழ்வூட்டி
பிரியமுற எம்மை எல்லாம் வழி நடத்தி காத்த
அரிய துணையாயிருந்த அப்பாவை எப்பிறப்பிற்-
காண்போம் இனி.

அன்னார் நோய்வாயுற்றிருந்த காலத்தில் தன்னலமற்ற சேவை புரிந்த யாழ். போதனா வைத்திய சாலை வைத்தியர்களுக்கும், மரணச் சடங்கில் கலந்து கொண்டு உதவி பல புரிந்த அயலவர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்;
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

83/14, தஞ்சி ஒழுங்கை,
அரசடி றோட்.
யாழ்ப்பாணம்.

[சி-1717]

---

மூளாய்
வதிரன்புலோ சித்திவிநாயகர் தேவஸ்தான

## பரிபாலன சபை
## ஆரம்ப பொதுக்கூட்டத்தின் தொடர்

இடம்: மேற்படி ஆலய மண்டபம்,
காலம்; **29-03-1992** ஞயிற்றுக்கிழமை
பி. ப 3-00 மணி

இத் தேவஸ்தானத்தில் அங்கத்தவராகச் சேர விரும்பும் இந்து சமயிகள் எவரும் ரூபா 1000/- ஒரே முறையில் செலுத்தி ஆயுள் அங்கத்தவராகச் சேரலாம். சாதாரண அங்கத்தவராக சேர விரும்புவோர் ரூபா 100/- வீதம் வருடம் ஒருமுறை செலுத்தி பதிவு செய்யலாம். இப் பொதுச்சபைக்கூட்ட அங்கத்துவ சேர்வு முடிவு 25-03-92 பி. ப 6-00 மணிக்கு முடிவடையும் என்பதையும், அங்கத்தவ உரிமை பெற்ற, தகுதியுள்ள அங்கத்தவர் மாத்திரம் இக் கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர் என்பதையும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

நன்றி;

''சித்தி விநாயகர் கருணை மகத்தானது''

தர்க்கார்,
மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர்-
தேவஸ்தான பரிபாலன சபை சார்பாக.

மூளாய்.
13-03-92.

(சி/1666)

---

மானிப்பாய் இந்துக் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்
## வருடாந்தப் பொதுக் கூட்டம்

காலம்: 19-04-1992 ஞாயிற்றுக்கிழமை
பி-ப 3-30 மணிக்கு

இடம்: வாகீசர் மண்டபம், மா. இ. க

சங்கத்தின் யாப்பின் பிரகாரம், வேட்பு மனுக்கள், பிரேரணைகள் சங்கச் செயலாளருக்கு 29-3-92 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2-00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கும்படி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அங்கத்தவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சொ. பாலகிருஷ்ணன்,
செயலாளர்.

லோட்டன் வீதி,
மானிப்பாய்.
17-3-92

[4533]

---

தென்னிந்திய திருச்சபை யாழ். பேராயம்
யாழ்ப்பாணத் திருச்சபை

## லெந்து, பரிசுத்த வார கால ஆராதனைகள்-1992

இடம்; திருமறை இல்லம்,
இல. 182, 1ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

20-03-1992 வெள்ளி மாலை 4-30 மணி
— 'மன்னிப்பின் சிலுவை'
27-03-1992 வெள்ளி மாலை 4-30 மணி
— 'பகிர்தலின் சிலுவை'
03-04-1992 வெள்ளி மாலை 4-30 மணி
— 'போராட்டத்தின் மத்தியில் - வாழ்வதன் சிலுவை'
05-04-1992 ஞாயிறு காலை 8 மணி
— 'திருவிருந்து ஆராதனை'
10-04-1992 வெள்ளி மாலை 4-30 மணி
— 'சீவித்துவத்தின் சிலுவை'
12-04-1992 ஞாயிறு காலை 8 மணி
— 'குருத்தோலை ஞாயிறு'
13-04-1992 திங்கள் மாலை 4-30 மணி
— 'பரிசுத்த திங்கள்'
14-04-1992 செவ்வாய் மாலை 4-30 மணி
— 'பரிசுத்த செவ்வாய்'
15-04-1992 புதன் மாலை 4-30 மணி
— 'பரிசுத்த புதன்'
16-04-1992 வியாழன் மாலை 4-30 மணி
— 'பெரிய வியாழன் திருவிருந்து'
17-04-1992 வெள்ளி காலை 9 மணி
— 'பெரிய வெள்ளி சிலுவை தியானம்'
19-04-1992 ஞாயிறு காலை 7 மணி
— 'உயிர்த்தெழுந்த திருநாள் - திருவிருந்து

குறிப்பு: பிரதி ஞாயிறு தோறும் காலை 8 மணிக்கு ஆராதனைகளும் தொடர்ந்து ஓய்வு நாள் பாடசாலையும் நடைபெறும்.

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

திரு. வி. எஸ். தேவகரன்,
சபை போதகர்,
யாழ். திருச்சபை.

[சி-1664]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பூரண தடை வேண்டும்

கொழும்பிலிருந்து தருவிக்கப்படும் பல உற்பத்திப் பொருள்களுக்கு (Finished Products) வரி விதிக்கவும்—

அந்த வரி மூலம் கிடைக்கும் வருமானத்தை உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு ஊக்குவிப்புப் பணமாகவும், மானியமாகவும் வழங்கவும்— முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

உள்ளூர் உற்பத்தியைப் பாதுகாக்கும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியற் பிரிவு இந்த முடிவை மேற்கொண்டு, நடைமுறைக்கும் கொண்டு வந்துள்ளது. வரி விதிப்புக்கு உட்படுத்தாமல் கொண்டுவரப்படும் பொருள்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பொருள்களுக்கு கொழும்பு விற்பனை விலையின் 300 முதல் 400 வீத வரி விதிக்கப்படும் என்று நம்பிக்கையாக அறியப்படுகிறது. இந்த வரிவிதிப்பு இங்கு உற்பத்தி செய்யப்படும் பொருள்களைத் தென்னிலங்கையில் இருந்து தருவிப்பதை இயன்ற வரை குறைப்பதற்காகவே மேற்கொள்ளப்படுகிறது.

இந்தளவு கூடுதலான வரியைக் கொடுத்து அதிக விலைக்கு விற்கும் போது சம்பந்தப்பட்ட பொருள்களுக்குப் போதிய சந்தை வாய்ப்பு இருக்கமாட்டாது என அனுமானிக்கப்படுகிறது.

தமிழ்ப் பகுதிகளில் யுத்தம் தொடங்கிய பின்னர். மிகக் குறிப்பாக அரசு பொருளாதார தடைவிதித்த பின்னர் உள்ளூர் பொருளாதாரத்தை வளர்ப்பதிலும், உற்பத்தியைப் பெருக்குவதிலும் புதிய விழிப்புணர்வும் உத்வேகமும் பிறந்தன. மக்களின் தேவையைக் கருதியே அவை உருவாகின என்பது உண்மை.

எவர் எதைச் சொன்னாலும் யுத்தம் தந்த கஷ்டம் சுயசார்புப் பொருளாதாரத்தை, உற்பத்தித்துறையை,மேம்பாடு அடையச்செய்திருக்கிறது. எமது சொந்தக்காலில் நிற்கக் கூடியதான முழு நிலையை எட்டவில்லையானாலும் அந்தப் பக்கமாக — சரியான திசையில் — அடி எடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இது விடயத்தில் முன் வைத்த காலை பின்வைக்காமல் பார்த்துக் கொள்வது மிகவும் முக்கியமாகும்.

ஏற்கனவே இப்பத்தியில் நாம் குறிப்பிட்டது போன்று, தென்னிலங்கைப் பொருள்களை இங்கே தருவிப்பது தமிழ்ப் பகுதிகளின் பொருளாதார வளர்ச்சியை நசுக்கிவிடும் பெரும் சதியாகும்.

அது மட்டுமா? வடக்கு-கிழக்கின் மீது அரசு விதித்த பொருளாதாரத் தடையினால் தமிழ் மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பது மட்டுமல்ல. கொழும்பு உற்பத்திகளின் சந்தை வாய்ப்புக் குறைந்து அங்கு கணிசமான பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது. அந்த தாக்கத்தை உணர்ந்து கொண்டதாலேயே அரசு தென்னிலங்கை உற்பத்திப் பொருள்களை தமிழ்ப் பகுதிகளுக்கு எடுத்துவர ஆரவாரம் இல்லாமல் அனுமதி வழங்கி உள்ளது. இது ஊன்றி ஆராயப்பட வேண்டிய ஒன்று.

தமிழர்களுக்கு எதிராக ஏவப்பட்ட பொருளாதாரத் தடை "பூமராங்" போல அரசாங்கத்தையே திரும்பச் சென்று குத்துவதற்குத் தொடங்கியுள்ளது. அதிலிருந்து தப்புவதற்கு அரசுக்கு இடங்கொடுக்கக் கூடாது, அதாவது இங்கு வேண்டிய அளவில் உற்பத்தியாகும் பொருள்களை ஒத்த பொருள்களை கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்குப் பூரண தடை விதிக்க வேண்டும்.

# கறுப்பினத்தவருடன் ஆட்சி நடத்த வெள்ளைநிறத்தவர் தயாரா?

## தென் ஆபிரிக்காவில் இன்று சர்வஜன வாக்கெடுப்பு

இரண்டுகோடி 80 லட்சம் கறுப்பின மக்களுடன் ஆட்சி நடத்தத் தயாரா இல்லையா என்பதை தீர்மானிக்கும் சர்வஜன வாக்கெடுப்பு இன்று 17-3-1992 தென் ஆபிரிக்காவில் 30 லட்சம் வெள்ளை நிற வாக்காளர் மத்தியில் மட்டும் நடத்தப்படுகிறது.

பேசும் மொழி, பின்பற்றும் மதம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்தே பெரும்பாலான நாடுகளில் அரசாங்கங்கள் அமைக்கப்பட்டு, ஆட்சி நடத்தப்பட்டு வருகின்றன.

சில நாடுகளில் பெரும் எண்ணிக்கையில் வாழும் ஓர் இனம் குறைந்த எண்ணிக்கையில் வாழும் இனத்தைச் சேர்ந்தவர்களை 'ஒருவருக்கு ஒரு வாக்கு' என்ற ஜனநாயகக் கவசத்தின் கீழ் அடக்கி ஆண்டு வருகின்றது. மதரீதியிலும் இதே பாகுபாடு தொடர்கின்றது. சிறுபான்மையின மக்கள் சமத்துவ உரிமையுடன் வாழக்கூடிய அரசமைப்புகளைப் பின்பற்ற இந்த நாடுகள் தயாராக இல்லை.

அப்படி சமத்துவ அரசமைப்பு முறைகளைப் பின்பற்றி வந்த நாடுகளில் கூட இன்று இன உணர்வு அதிகரித்து, மாநிலங்கள் சுதந்திர நாடுகளாகப் பரிணமித்து வருகின்ற இப்புதிய உலகில்—

எண்ணிக்கை பெரிதல்ல; வண்ணம் தான் முக்கியம் என்ற போக்கில் எண்ணிக்கை குறைந்த ஒரு பிரிவினர், எண்ணிக்கையில் பல மடங்கு அதிகமான ஒரு பிரிவினரை அடக்குமுறை ஆட்சியின் கீழ் பல தசாப்தங்களாக நசுக்கி வருகின்ற அநியாயத்தை உலகில் வேறு எங்கு காணமுடியும்?

தென் ஆபிரிக்காவில் மட்டுமே இதனை இன்று காண முடிகின்றது. பேசும் மொழி, பின்பற்றும் மதம் முக்கியமல்ல; மனிதனின் தோல் நிறம் தான் ஆட்சியை நடத்தும் தகுதியைப் பெற்றுள்ளது என்பதை வலியுறுத்தும் தென் ஆபிரிக்க அரசு, நாகரீக உலகில் ஒரு 'கரும்புள்ளி' ஆக அமைந்துள்ளது.

ஆம். கறுப்பு நிறத்தவர் மீது வெள்ளை நிறத்தவர் நடத்தும் ஆட்சிதான் அங்கு நடைபெறுகின்றது.

### தென் ஆபிரிக்கா; புள்ளி விவரம்

ஆபிரிக்கக் கண்டத்தின் தென் முனையில் உள்ளது தென் ஆபிரிக்கா. தெற்கு, கிழக்கு எல்லையாக இந்துமா கடலும் மேற்கு எல்லையாக அத்திலாந்திக்கடலும் அமைந்துள்ளன. வடக்கு எல்லைகளாக கறுப்பு இன நாடுகளான சுவாஸிலாந்து, மொஸாம்பிக், ஸிம்பாப்வே, பொட்ஸ்வானா, நமீபியா ஆகியன உள்ளன.

4 லட்சத்து 71 ஆயிரத்து 445 சதுர மைல் விஸ்தீரணம் கொண்ட இந்த நாட்டின் சனத்தொகை 3 கோடி 79 லட்சத்து 84 ஆயிரம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் 68.2 சத வீதமானோர் கறுப்பு நிறத்தவர்கள்.

கறுப்பு இன மக்களில் பல பிரிவினர் உள்ளனர். (இது பற்றிய விவரம் வருமாறு; ஸுலு — 23.7%, வட ஸோதோ — 9.8%, ஷோஸா — 9.7%, தென் ஸோதோ — 7.3%, ட்ஸ்வானா 5.7%, ஏனையோர் — 12%)

வெள்ளை இனத்தவர் பதினெட்டுச் சதவீதம். ஏனைய நிறத்தவர் (Coloured) 10 சத வீதத்தினர். ஆசிய நாட்டவர் 3.3 சத வீதத்தினர்.

உத்தியோக மொழிகளாக ஆபிரிக்கனர் மொழியும் ஆங்கில மொழியும் உள்ளன. உத்தியோக மதம் என ஒன்று அங்கு இல்லையாயினும் 20.4 சத வீதத்தினர் பாரம்பரிய நம்பிக்கைகளைக் கொண்ட பழங்குடியினரின் மதத்தைப் பின்பற்றி வருகின்றனர். 6.5 சத வீதத்தினர் மட்டுமே ரோமன் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றுகின்றனர். 6.5 வீதத்தினர் ஆங்கிலிக்க மதத்தையும் 8.5 வீதத்தினர் மெதடிஸ்த பிரிவையும் சேர்ந்தவர்கள். 36 சத வீதத்தினர் சிறிய மதப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள்.

### வெள்ளையர் ஆட்சி

இருண்ட கண்டம் என்று வர்ணிக்கப்படும் ஆபிரிக்காவில் இந்த நிற வேற்றுமை ரொடீஷியா என்னும் நாட்டில் கடைப் பிடிக்கப்பட்டு வந்தது.

எண்ணிக்கையில் குறைந்த வெள்ளையர் அங்கு பெரும் எண்ணிக்கையில் வாழும் கறுப்பு இனத்தை அடக்குமுறையின் கீழ் ஆண்டு வந்தனர். 'ஒருவருக்கு ஒரு வாக்கு' என்ற ஜனநாயகக் கோட்பாடு கறுப்பின மக்களுக்கு வழங்கப்படவில்லை.

அடக்கு முறைக்கு எதிராக கறுப்பின மக்கள் நடத்திய கெரில்லாப் போர் இறுதியில் வெற்றியளித்தது.

ரொடீஷியா, ஸிம்பாப்வே யாக மாறி கறுப்பின மக்களின் ஆட்சி அங்கு நடக்கிறது. ஆனால் தென் ஆபிரிக்கா தொடர்ந்தும் நிற வேற்றுமையைக் கடைப்பிடித்து வருகிறது.

1950 முதல் 1980 வரை தென் ஆபிரிக்க வெள்ளை இன அரசின் நிற வேற்றுமை அடக்குமுறை உச்சக் கட்டத்தில் இருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தென்னாபிரிக்க ஜனாதிபதியாக எப். டபிள்யு. டி கிளேர்க் பதவி ஏற்றார். அதன் பின்னர் வாக்குரிமை மறுக்கப்பட்ட கறுப்பின மக்களின் விடுதலை இயக்கமான ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் மீது விதிக்கப்பட்ட தடையை டிகிளேர்க் நீக்கினார். ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவை 25 ஆண்டு கால சிறைவாசத்தின் பின் விடுதலை செய்யும் உத்தரவை அவர் பிறப்பித்தார்.

### சீர்திருத்த எண்ணம்

அதனைத் தொடர்ந்து நிற வேற்றுமையை ஒழித்து, கறுப்பின மக்களுடன் அதிகாரத்தை வெள்ளையர்களும் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்த டி கிளேர்க் தலைமையிலான வெள்ளை நிற அரசு முனைந்தது.

இதன் காரணமாக உலக அரங்கில் வெள்ளை இன அரசுக்கு இருந்து வந்த எதிர்ப்புக் குறைய ஆரம்பித்தது. 'ஒருவருக்கு ஒரு வாக்கு' என்ற அடிப்படையில் தேர்தலை நடத்தினால் அடுத்த நிமிடம் வெள்ளை நிற ஆட்சி பறிபோய்விடும் என்ற நிலையைத் தவிர்த்து, ஏதாவது ஒரு வழியில் வெள்ளை நிறத்தவரும் ஆட்சியில் பங்குபற்றக் கூடியதான அரசியல் அமைப்பு ஒன்றை உருவாக்குவதில் தான் ஜனாதிபதி டி கிளேர்க் நாட்டம் காட்டி வந்தார்.

### தீவிர வெள்ளையர் காட்டும் எதிர்ப்பு

தெற்கு, ஆளும் தேசியக் கட்சியில் இருந்து பத்தாண்டுகளுக்கு முன்னர் வெளியேறிய சிலர் அமைத்த கன்சர்வேட்டிவ் கட்சி பெருத்த சவாலாக உருவெடுத்துள்ளது

தென் ஆபிரிக்காவில் வெள்ளை இனத்தவருக்கு என்று தனியான தாயகம் ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று கன்சர்வேட்டிவ் கட்சி வற்புறுத்தத் தொடங்கியது.

தென் ஆபிரிக்காவில் கறுப்பருக்கு இடமே இல்லை என்று கூறும் வலதுசாரி வெள்ளை இனத் தீவிரவாத அமைப்புக்களும் சுறுசுறுப்பாக செயற்படத் தொடங்கின.

சீர்திருத்தத்திற்கு வெள்ளையர் மத்தியில் திரண்டு வந்த எதிர்ப்பு டி கிளேர்க் — மண்டேலா சமரசப் பேச்சுகள் வெற்றிகரமாக நடத்தப்படுவதற்கு முட்டுக்கட்டையாக மாறின.

இப் பேச்சுக்கள் வெற்றி அளிப்பின் தென் ஆபிரிக்கா கறுப்பின நாடாக மாறிவிடும் என்றும், 1993 ஆம் ஆண்டளவில் கறுப்பரான நெல்சன் மண்டேலா நாட்டின் ஜனாதிபதியாகி விடுவார் என்றும் தீவிரக் குழுக்கள் பிரசாரம் செய்யத் தொடங்கின.

### சர்வஜன வாக்கெடுப்பு மார்ச் 17 — இன்று

இந்த நிலையில் நாட்டில் உள்ள வெள்ளை இன வாக்காளர் மத்தியில் மட்டும் "2 கோடி 80 லட்சம் கறுப்பின மக்களுடன் அதிகாரப் பகிர்வு செய்து கொள்ள சம்மதமா, இல்லையா" என்பதை அறிந்து கொள்ளும் சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றை நடத்தப் போவதாக ஜனாதிபதி டி கிளேர்க் திடீரென்று அறிவித்தார்.

இவ் வாக்கெடுப்பு இன்று 17-3-1992 நடைபெறவிருக்கிறது. இதில் 30 லட்சம் வெள்ளை இன வாக்காளர்கள் வாக்களிக்கும் உரிமை பெற்றுள்ளனர்.

ஜனாதிபதி டி கிளேர்க்கின் சீர்திருத்தக் கொள்கை. அவரது உள்ளத்தில் இருந்து பிறந்ததா என்பதைச் சந்தேகிப்பது போன்று அவர் வெள்ளையர் மத்தியில் மட்டும் நடத்தும் சர்வசன வாக்கெடுப்பு அமைந்துள்ளது.

வெள்ளையரைக் கேட்டு, அவர்களின் இணக்கத்தைப் பெற்றுத்தான் கறுப்பின மக்களின் பிறப்புரிமையை வழங்குவது என்ற கொள்கையைத் தான் டி கிளேர்க் கடைப்பிடிக்கின்றார். வாக்கெடுப்

**- தீபன்ராஜா -**

பில் தாம் தோற்றால் பதவி விலகப் போவதாக டிகிளேர்க் அறிவித்துள்ளது, நிற வேற்றுமைக் கொள்கைக்கு முடிவு கட்டி சரித்திரத்தில் இடம் பெறத் தாம் தயாராக இல்லை என்பதையே எடுத்துக் காட்டியுள்ளது.

இந்த நிலையில் — சீர்திருத்தக் கொள்கைக்கு எதிராக வெள்ளையர் மத்தியில் ஆதரவு அதிகரித்து வருவதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

இந்த வாக்கெடுப்பில் வெள்ளையரில் பெரும்பான்மையோர் 'ஆம்' என்று வாக்களிப்பின். கறுப்பின மக்களுக்கு நீண்ட காலமாக இழைக்கப்பட்டு வரும் அநியாயம் ஒழியும்.

'இல்லை' என்று வாக்களிப்பின் மீண்டும் தென்ஆபிரிக்காவில் உள்நாட்டுக் கலவரம் தீவிரமடையும்.

உலகில் 'ஒதுக்கப்பட்ட' நாடாக தென் ஆபிரிக்கா தொடர்ந்து கணிக்கப்படும்.

இன்று நடைபெறும் வாக்கெடுப்பு 'நிறவேற்றுமை' என்ற கறையை போக்க உதவுமா?

★

## உலக அரசியல்

## உலகக் கிண்ண கிரிக்கெட்:

# தென்னாபிரிக்காவுக்கு தடை காத்திருக்கிறது!

கேப்டவுன், மார்ச் 17

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டித் தொடரில் அரை இறுதி ஆட்டத்தில் பங்குபற்றத் தெரிவாகியிருக்கும் தென் ஆபிரிக்க அணி போட்டித் தொடரில் மேற் கொண்டு விளையாட முடியாதநிலை ஏற்படக்கூடும் எனக் கருதப்படுகிறது.

கறுப்பர்களுக்கு எதிரான இனவாதக் கொள்கையைக் கடைப்பிடித்து வந்தமைக்காக நீண்டகாலம் சர்வதேச போட்டிகளிலிருந்து தென் ஆபிரிக்காவை உலக சமுதாயம் ஒதுக்கி வைத்திருந்தது என்பதும் —

அத்தகைய கொள்கையைக் கைவிடத் தயார் என்று தென் ஆபிரிக்கா அறிவித்ததை அடுத்து சர்வதேச போட்டிகளில் பங்குபற்ற அதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நீக்கப்பட்டது என்றும் —

அதனைத் தொடர்ந்து உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் முதல் தடவையாக அந்த நாட்டு அணி பங்குபற்றியது என்பதும் தெரிந்தவையே.

தற்போது கறுப்பர்களுக்கு உரிய அதிகாரங்களை வழங்கும் அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமா என்பது குறித்து முடிவு செய்வதற்காக அங்குள்ள வெள்ளையர் மத்தியில் இன்று சர்வஜன வாக்கெடுப்பு நடைபெற இருக்கிறது.

இந்த வாக்கெடுப்பில், அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமென வெள்ளையர் ஆதரிக்காவிட்டால், மீண்டும் அந்த நாட்டுக்கு எதிராக சர்வதேசத் தடைகள் விதிக்க வேண்டிய நிலை உருவாகும் என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

அத்தகைய நிலை ஏற்பட்டால் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் இருந்தும் தென்னாபிரிக்கா [illegible] விக்கப்பட்டது. [உ-10]

### தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 17

இன்று பல ஆலயங்களில் வருடாந்த தேர்த்திருவிழாக்கள் நடைபெறுகின்றன.

சுன்னாகம் ஐயனார் ஆலயம், கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயம், மூளாய் வத்திரன்புலோ முருகமூர்த்தி ஆலயம் ஆகியவற்றில் இன்று காலை தேர்த்திருவிழாக்கள் நடைபெறும்.

பங்குனி உத்தரமான நாளையும் சில கோவில்களில் தேர்த்திருவிழாக்கள் நடைபெறுகின்றன

சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் ஆலயத் தேர்த்திருவிழா நாளை நண்பகல் நடைபெறும்.

[அ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிவாரணம் மறுப்பு:

# வியாழனன்று மீனவர் கண்டன ஊர்வலம்

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட கடல் றொழிலாளருக்கு இதுவரை நிவாரணம் எதுவும் வழங்கப்படாததைக் கண்டித்து ஊர்வலம் ஒன்று எதிர்வரும் வியாழக்கிழமை இடம்பெற உள்ளது.

அன்று காலை 8 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலய முன்றலில் இருந்து ஆரம்பமாகும் ஊர்வலம் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்குச் சென்று மகஜர் ஒன்றை சமர்ப்பிக்கும்.

ஆனைக்கோட்டை புனித சூசையப்பர் கடற்றொழிற் சங்கம், சாவற்கட்டு கடல் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், நவாலி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், கிராமிய கடற்றொழிலாளர் அபிவிருத்திச் சங்கம், உயரப்புலம் கடற்றொழிலாளர் கிராமிய அபிவிருத்திச் சங்கம் ஆகியவை ஒன்றிணைந்து இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்துள்ளன. (த)

# ராஜீவ் கொலைபின்னணியில் வெளிநாட்டுச் சக்திகள்

## காங்கிரஸ் சத்தியக் கடதாசி

புதுடில்லி, மார்ச் 17

ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில் இருந்த வெளிநாட்டுச் சக்திகளின் பெயர்களை அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சத்தியக் கடதாசி ஒன்றில் வெளிப்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில் இருக்கக் கூடிய உள்நாட்டு — வெளிநாட்டுச் சக்திகள் பற்றி விசாரணை செய்வதற்கு ''ஜெயின்'' ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

இந்த ஆணைக்குழுவிடம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி சமர்ப்பித்த பதினொரு பக்க அறிக்கையிலேயே ராஜீவ் கொலையில் வெளிநாட்டுச் சக்திகளின் தொடர்பு குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டிலுள் தேச விரோத சக்திகளுக்கு அனுசரணையாக இந்த வெளிநாட்டு சக்திகள் செயற்பட்டதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுச் செயலாளர் திருமதி ராஜேந்திர குமாரி வாஜ்பாய் கையெழுத்திட்ட இந்த சத்தியக் கடதாசி, காங்கிரஸ் கட்சியின் சட்டப் பிரிவு அமைப்பாளர் ஆர். எம். மித்தாவினால் ஆணைக்குழுவிடம் கடந்த வெள்ளியன்று சமர்ப்பிக்கப்பட்டது. [த]

## 'டாங்கிகள்'...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் வாங்கப்பட்டன.

இராணுவ உயரதிகாரி ஒருவரின் மனைவியின் சகோதரரும், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியுமான ஒருவரே இந்தக் கொள்வனவை முன்னின்று நடத்தினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

1985 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா இராணுவத்துக்கென ஸ்பெயினிலிருந்து ஒரு விமானம் நிறைய ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகள் விலைக்கு வாங்கப்பட்ட வர்த்தகத்திலும் இந்த நபரே சம்பந்தப்பட்டிருந்தாராம்.

ஆயுதங்களை ஏற்றிவந்த இந்த விமானம் எரிபொருள் முடிந்ததால் திருவனந்தபுரத்தில் தரையிறக்கப்பட்டதும்—

விமானத்தில் ஆயுதங்கள் ஏற்றப்பட்டிருப்பது அங்கு வைத்து கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து, விமானம் திருவனந்தபுரத்தில் தடுத்து வைக்கப்பட்டதும்—

அப்போதைய ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா, அவ்வேளை இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியுடன் தனிப்பட்ட முறையில் பேச்சு நடத்தியதை அடுத்து விமானம் விடுவிக்கப்பட்டதும் குறிப்பிடத் தக்கது.

விமானத்தில் வந்த ஆயுதங்கள் மற்றும் வெடிப் பொருள்கள் கொழும்பு வந்து சேர்ந்த போதும் அவை பாவனைக்கு உதவாதவை என்று காணப்பட்டதை அடுத்து கைவிடப்பட்டன.

தற்போது கொள்வனவு செய்யப்பட்டிருக்கும் செக்கோஸ்லேவாக்கியா கவச வாகனங்களும் பாவனைக்கு உதவாதவை என்று ஒதுக்கப்பட்டிருப்பதும்—

பழுதடையும் இந்தக் கவச வாகனங்களை உதிரிப்பாகங்கள் இல்லாததால் திருத்த முடியாதிருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கவை.

கவசவாகனக் கொள்வனவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடி குறித்து பூரண விசாரணை நடத்த ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்று சில மூத்த இராணுவ அதிகாரிகள் அரசைக் கேட்டுள்ளனர் என்றும் அறியவருகிறது. [உ-10]

## கும்பாபிஷேகம்

ஏழாலை களபாவோடை ஸ்ரீவசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் நாளை புதன்கிழமை நண்பகல் 11 மணியளவில் மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

காலை எட்டு மணிக்கு கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகும். விழா முடிவில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். [அ]

## மத்திய.....

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மாணிக்கும் திட்டம் ஒன்றை தயாரித்து இருந்தது. கட்டட நிர்மாண வேலையை ஸூப்ளின் என்ற ஜேர்மன் நிறுவனத்திடம் மத்திய வங்கி ஒப்படைக்க இருந்தது.

அரச அடமான மற்றும் முதலீட்டு வங்கி 150 கோடி ரூபா செலவில் பல மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கத் திட்டமிட்டிருந்தது.

பாதுகாப்புச் செலவினம் அதிகரித்துள்ளதன் காரணமாக அத்தியாவசியமற்ற பல மாடிக் கட்டடங்களைக் கட்டும் நிர்மாண வேலைகளைக் கைவிடும்படி ஜனாதிபதி சம்பந்தப்பட்ட அரச அமைப்புகளுக்கு உத்தரவிட்டிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-எ]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 17-3-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## மறுமலர்ச்சிக் கழக 12 ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 17

யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் 12 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்ச்சிகள் நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் ஆரம்பமாகி சிறப்புற இடம் பெற்றன.

மறுமலர்ச்சிக் கழகத்தின் தலைவர் திரு. பாஸ்கரன் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. யோகரத்தினம் யோகி ஆகியோர் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

''உள்நாட்டு வெளிநாட்டு பரிமாணங்களும் இலங்கையின் இன்றைய நிலையும்'' என்ற தலைப்பில் திரு. திருநாவுக்கரசு கருத்துரையாற்றினார்.

[2 ஆம் பக்கத்தில் அறிக்கை]

[ஒ-5]

## கோவிலின் கூரை சேதம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

நீர்வேலிப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஹெலிக்கொப்டர் ஒன்று துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபட்டது.

இதன் காரணமாக நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோவில் கூரைப்பகுதி சேதத்துக்குள்ளானது.

## மும்முனைத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்றுக் காலை 6 மணியளவில் பருத்தித்துறைப் பகுதிக்குத் திடீரென வந்த இரண்டு பொம்மர்கள் பருத்தித்துறை முனைப்பகுதியில் நான்கு குண்டுகளை வீசித் தாக்குதலை ஆரம்பித்தன. இதனால் ஒரு வீடு தரைமட்டமானது. அந்த வீட்டில் இருந்தவர்கள் தெய்வாதீனமாக உயிர் தப்பினர்.

மீண்டும் காலை 7 மணியளவில் இப்பகுதி மீது இரண்டு விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின. இதனால் இரு வீடுகள் பலத்த சேதமடைந்தன.

இதற்கிடையில்—

காலை 6 மணி முதல் மூன்று பொம்மர்கள், அவ்ரோ ஒன்று, ஒரு ஹெலி, ஒரு சீ-பிளேன் ஆகியவற்றிலிருந்தும், கடற்பிராந்தியத்தில் தரித்து நின்ற ஆறு பீரங்கிப் படகுகளிலிருந்தும் வல்வெட்டித்துறைப் பகுதியை நோக்கி கடும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

அதே வேளை—

பலாலி இராணுவ முகாமிலிருந்தும் இப்பகுதிகளை நோக்கி விட்டு, விட்டு ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

வல்வெட்டித்துறை பூச்சிகுத்தான் ஒழுங்கை, ஆலடி, ரேவடி, வேம்படி, ஆதிகோவிலடி, சந்தி ஒழுங்கை மற்றும் உடுப்பிட்டி, மயிலியதனை, கெருடாவில், ஊரிக்காடு, திருவில், காட்டுப்புலம், தொண்டமானாறு ஆகியன இத் தாக்குதல்களுக்கு இலக்காகின.

விமானக் குண்டு வீச்சினால் வல்வெட்டித்துறையில் மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்தன. கெருடாவில் உட்பட மற்றும் பல இடங்களில் பல வீடுகள் மும்முனைந் தாக்குதல்களினால் சேதமுற்றன; பொது இடங்கள், பெறுமதிமிக்க உடைமைகள் என்பனவும நாசமாகின.

நண்பகல் 11.45 மணியளவில் மும்முனைத் தாக்குதல்கள் திடீரென ஓய்வுக்கு வந்தன.

நேற்றிரவு 7 மணியளவில் மீண்டும் பலாலிப் பகுதியிலிருந்து வல்வெட்டித்துறைப் பகுதியைநோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. [உ-169-ம-3]

# ஆஸ்திரேலியாவில் கல்வி கற்க புலமைப்பரிசில் திட்டம்

ஜோன் குரோவ்போர்ட் புலமைப்பரிசில் திட்டத்தின் [ஜே. சி, எஸ்.எஸ்.] கீழ் ஆஸ்திரேலியாவில் பட்டப்படிப்பு கற்கை நெறிக்கு ஜி, சீ. ஈ. உயர்தர பரீட்சையில் சித்தி அடைந்த மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் 1992 ஜனவரி முதலாம் திகதி அன்று 18 வயதுக்கும், 28 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்க வேண்டும் என்றும்—

ஆகக் குறைந்தது ஜி. சீ. ஈ. உயர் தரப்பரீட்சையில் ஆகக் குறைந்த ''ஏ'' தர கூட்டு மொத்தப் புள்ளியான 300 புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப் படுகிறது. பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

விண்ணப்பிக்கவேண்டிய கடைசித் திகதி ஏப்ரல் 3 ஆம் திகதி ஆகும்.

விண்ணப்பங்களை கல்வி அதிகாரி, ஆஸ்திரேலியா உயர் ஸ்தானிகராலயம், த. பெ. இல. 742, கொழும்பு என்ற முகவரிக்கு அனுப்புமாறும் கோரப்பட்டுள்ளது.

(இந்த புலமைப் பரிசில் திட்டம் தொடர்பான மேலதிக விவரங்களை இல. 15, இரண்டாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் முகவரியில் இயங்கும் உதயன் விளம்பரப் பணிமனையில் அலுவலக நேரங்களில் பார்வையிடலாம்). (இ)

# நூறு இலங்கைத் தமிழர் அல்பேனியாவில் நிர்க்கதி!

சுமார் நூறு இலங்கைத் தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் அல்பேனியா நாட்டில் உணவு மற்றும் இருப்பிட வசதியின்றி நிர்க்கதி நிலையில் விடப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது.

ஐரோப்பிய நாடுகளில் தொழில் வாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படும் என்ற உறுதி மொழியின் பேரில் இந்த இளைஞர்களும் யுவதிகளும் கொழும்பு மற்றும் பாங்கொக் ஆகிய நகரங்களில் இயங்கும் வெளிநாட்டு தொழில் ஏஜண்டுகளால் கூட்டிச் செல்லப்பட்டனர் என்றும்—

ஒவ்வொருவரும் 5 ஆயிரம் முதல் 6 ஆயிரம் அமெரிக்க டொலர் வரை ஏஜண்டுகளிடம் அதற்காகச் செலுத்தினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அல்பேனியாவின் டுரஸ்ஸி நகரில் உள்ள 'அட்ரியாரிக்கா' என்ற பெயரிலான கரையோர விருந்தினர் விடுதியில் — பழுதடைந்த கட்டடம் ஒன்றில் — இத்தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று நோர்வே நாட்டுப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

எந்த ஐரோப்பிய நாட்டுக்கும் செல்லக்கூடிய வீஸா எதுவுமின்றி கடந்த ஓரிரு மாதங்களாக இவர்கள் அங்கு தங்கியிருக்கின்றனர்.

அல்பேனியாவில் நிர்க்கதியாகி உள்ளவர்களில் ஒருவரான நாகராஜா சுபாஷ்கரன் [வயது 24] தமக்கு நேர்ந்த நிலை பற்றி தெரிவித்த தகவல்கள் வருமாறு:-

தங்களை அல்பேனியாவிலிருந்து மஸிடோனியா ஊடாக யூகோஸ்லேவியாவுக்குக் கூட்டிச் செல்வது என்றும் —

பின்னர் அங்கிருந்து அவர்களை தமிழ் ஏஜண்ட் ஒருவர் ஐரோப்பிய நாடுகளுக்கு கூட்டிச் செல்வார் என்றும் ஏற்பாடாகியிருந்தது.

முதலில் 34 பேர் கொண்ட குழு ஒன்று மஸிடோனியா எல்லையைக் கடந்து செல்ல அனுமதிக்கப்பட்டது. யூகோஸ்லேவியா நாட்டில் மீண்டும் கலவரம் ஆரம்பமாகிவிட்டதாகக் கூறி அவர்கள் இடைவழியில் தடுக்கப்பட்டு அல்பேனியாவுக்குத் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர்.—என்றார் அவர்.

அல்பேனியாவில் உணவுப் பற்றாக்குறை நிலவுகின்றது. நிர்க்கதியான நிலையிலுள்ள இவர்களை மீட்க ஒருவரும் முன்வரவில்லை என்று அல்பேனிய வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் சொன்னார். [உ-எ]

## பிரபாகரனை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

நேற்று ஒரேகுரலில் கருத்துத் தெரிவித்தனர்.

அதற்குப் பதிலளித்த உள்துறை அமைச்சர் சவான், விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்வது குறித்து அமைச்சரவையின் அரசியல் விவகாரக் குழு பரிசீலனை செய்து வருகின்றது என்றார்.

இருவரையும் கைது செய்து இந்தியாவிற்குக் கொண்டுவருவது குறித்து இலங்கை அரசுடன் இந்தியா பேச்சுகள் நடத்துகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

## யாழ்....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

காப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியது. அந்தப் பேச்சின் போதே இதற்கான இணக்கம் காணப்பட்டது. [உ-3]

## பகிஷ்கரிப்பு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 17

வடக்கில் பணிபுரியும் தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கக் கோரி நடத்தப்படவுள்ள தொடர் போராட்டங்களின் முதற் கட்டமாக யாழ். மாவட்டத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் இன்று கடமைக்குச் சமுகமளிக்காமல் பகிஷ்கரிப்பு செய்யவுள்ளனர்.

இதேவேளை இன்றைய பகிஷ்கரிப்புப் போராட்டத்தில் தமக்கு ஆதரவாகத் தம்முடன் சேர்ந்துகொள்ளுமாறு தொண்டர் ஆசிரியர் சங்கம் சகல பாடசாலை ஆசிரியர்களுக்கும், மாணவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளது.

## உள்ளூராட்சி ஊழியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மார்ச் 17

உள்ளூராட்சி ஊழியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று இம்மாதம் 23 ஆம், 24 ஆம், 25 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி திணைக்களப் பணிமனையில் நடத்தப்படும்.

கிளிநொச்சி மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ரி. வி. கிருஷ்ணசாமி இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார். [இ-126]

## ஐரோப்பிய....

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

சுவிட்சர்லாந்து ஆகிய நாடுகளின் தூதுவர்கள் கொழும்பில் தனித்தனியாக அரசியல் கட்சிகளின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

யுத்தம் தொடர்வதால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை என்றும், எல்லாத் தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கி ஓர் அரசியல் தீர்வை எட்ட வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தி வருவதாகவும் அறியவந்தது. [அ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org